**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்.**

முன்னிலை : = **திருமதி.உ.மோனிகா, எம்.எல்.,**
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்,
2018ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.563/2017**

ஷேக்கூடுசாயபு ....வாதி

/எதிர்/

இஸ்மாயில் .... பிரதிவாதி

இவ்வழக்கு 19.04.2018ல் என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. டி. பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. தயானந்தம் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வழக்கு சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

இவ்வழக்கு வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.6,79,500/-ம் அசல் தொகை ரூ.5,00,000/-க்கு பின்வட்டியும் மற்றும் செலவுதொகைக்கும் வழக்கு தாக்கல்.

2) **வழக்குரையின் சுருக்கம்**:-

வாதி தரப்பில், 11.8.2014 அன்று ஷேக் விழுப்புரம் டவுன், விராட்டிக்குப்பம் பாதை, முருகையன் லே அவுட் , நெ.17பி, முகவரியில் வசிக்கும் ஷேக்அப்துல் ரஹீம் குமாரர் முகமது அலியிடம் பிரதிவாதி தாவா பிராம்சரி நோட்டு படி சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.5,00,000/-க்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் கூடிய அசல் வட்டித்

தொகையை முகமது அலி வேண்டும்போது முகமது அலியிடமாவது அல்லது முகமது அலி உத்தரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாக சம்மதித்து தாவா பிராம்சரி நோட்டை விழுப்புரத்தில் எழுதிக் கொடுத்துள்ளதாகவும் மேற்படி முகமது அலி பிரதிவாதியே நேரில் அ ணுகியும் ஆள் மூலமாகவும் கேட்டும் பிரதிவாதி முகமதுஅலிக்கு தாவா பிராம்சரி நோட்டுபடி சேரவேண்டிய பாக்கி அசல் வட்டித் தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் காலதாமதம் செய்து வந்ததால் முகமது அலி வாதியிடம் 5.5.2017 அன்று பிராம்சரிக்கு உண்டான அசல் வட்டி தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டு தாவா பிராம்சரி நோட்டை வாதி பெயருக்கு விழுப்புரத்தில் மேடோவர் செய்து கொடுத்துவிட்டதாகவும் அதன் பிறகு வாதி பிரதிவாதியை தாவா தொகையை பைசல் செய்யும்படி பலமுறை நேரிலும், ஆள் மூலமாகவும் கேட்டும் பிரதிவாதி தொகை கொடுத்து பைசல் செய்யாததால் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 8.7.2017 அன்று அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு பிரதிவாதி தொகை கொடுத்து பைசல் செய்யாததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் பிரதிவாதி விவசாயி இல்லை என்பதால் தாவா பிராம்சரி நோட்டுக்கு 12% வாதி கோருவதாகவும் இவ்வழக்கு தாக்கல்.

3) இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. தயானந்தம் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதியை 02.04.2018 தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

## 4. தீர்வு

5) இவ்வழக்கில் வாதி கோரியுள்ளபடி பரிகாரம் வழங்கக்கூடியதா?

6. வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில்

வாதி தரப்பில், 11.8.2014 அன்று ஊேஷக் விழுப்புரம் டவுன், விராட்டிக்குப்பம் பாதை, முருகையன் லே அவுட், நெ.17பி, முகவரியில் வசிக்கும் ஊேஷக்அப்துல் ரகிம் குமாரர் முகமது

அலியிடம் பிரதிவாதி தாவா பிராம்சரி நோட்டு படி சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.5,00,000/-க்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் கூடிய அசல் வட்டித் தொகையை முகமது அலி வேண்டும்போது முகமது அலியிடமாவது அல்லது முகமது அலி உத்தரவு பெற்றவரிடமாவது கொடுத்து பைசல் செய்வதாக சம்மதித்து தாவா பிராம்சரி நோட்டை விழுப்புரத்தில் எழுதிக் கொடுத்துள்ளதாகவும் மேற்படி முகமது அலி பிரதிவாதியே நேரில் அ ணுகியும் ஆள் மூலமாகவும் கேட்டும் பிரதிவாதி முகமதுஅலிக்கு தாவா பிராம்சரி நோட்டுபடி சேரவேண்டிய பாக்கி அசல் வட்டித் தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் காலதாமதம் செய்து வந்ததால் முகமது அலி வாதியிடம் 5.5.2017 அன்று பிராம்சரிக்கு உண்டான அசல் வட்டி தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டு தாவா பிராம்சரி நோட்டை வாதி பெயருக்கு விழுப்புரத்தில் மேடோவர் செய்து கொடுத்துவிட்டதாகவும் அதன் பிறகு வாதி பிரதிவாதியை தாவா தொகையை பைசல் செய்யும்படி பலமுறை நேரிலும், ஆள் மூலமாகவும் கேட்டும் பிரதிவாதி தொகை கொடுத்து பைசல் செய்யாததால் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 8.7.2017 அன்று அறிவிப்பு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு பிரதிவாதி தொகை கொடுத்து பைசல் செய்யாததால் வாதி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்து 11.08.2014 தேதியில் முகமது அலி பேருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா பிராம்சரி நோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும் 5.5.2017 தேதியில் வாதி பேருக்கு முகமது அலி எழுதிக் கொடுத்த பிராம்சரி நோட்டு மேடோவர் அசல் வா.சா.ஆ.2 ஆகவும் 8.7.2017 தேதியில் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல்அட்டை வா.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

7. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. தயானந்தம் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதியை 02.04.2018 தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிக்கு உரிய முறையில் கட்சி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், ஒருதலைபட்சமாக

தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வாதி தரப்பு சாட்சியத்திலிருந்தும், வாதி தரப்பு சான்றாவணங்களிலிருந்தும் வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதி வாதி இவ்வழக்கில் கோரியுள்ளபடி பரிகாரம் வழங்கக்கூடியதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.6,79,500/-ம், அசல் தொகை ரூ.5,00,000/-க்கு வழக்கு தாக்கலான தேதியிலிருந்து உத்தரவு பிறப்பித்த தேதிவரை 9% வட்டி கணக்கீடு செய்தும், உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தொகை முழுவதும் பைசலாகும் தேதி வரை 6% வட்டியும் வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், செலவுத்தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2018ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ம் நாள் அவையறியத் தீர்ப்பு பகரப்பட்டது.

(ஒப்பம் - உ. மோனிகா)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>

வா.சா.1 திரு. ஷேஷக்கூடு சாயபு

<u>வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ1 | 11.08.2014 | முகமது அலி பேருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா பிராம்சரி நோட்டு அசல் |
| வா.சா.ஆ2 | 05.05.2017 | வாதி பேருக்கு முகமது அலி எழுதிக் கொடுத்த பிராம்சரி நோட்டு மேடோவர் அசல் |
| வா.சா.ஆ3 | 08.07.2017 | வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| வா.சா.ஆ.4 | --- | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல்அட்டை |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை

(ஒப்பம் - உ. மோனிகா)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

//உண்மை நகல்//